# அருள் ஒளி



இதழ்: 173

கார்த்திகை~2025

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (கார்த்திகை ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## உலகப் பிரசித்தி பெற்ற தருமை ஆதீனத்தில் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்ற பெருமாநாடு

**ஆசிரியர் உரை**

பிரசித்தி பெற்ற தருமை ஆதீன குரு முதல்வர், நட்சத்திர குருமணி, ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியர் சுவாமிகளின் அகவை 60 பூர்த்தியை முன்னிட்டு மிகப்பெரிய மணிவிழா கடந்த 10 நாட்கள் தமிழ்நாடு மயிலாடுதுறை தர்மபுர ஆதீன கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து இந்து சமயம் சார்ந்த பெரியோர்கள் அழைக்கப்பட்டு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் 10 நாட்களும் இடம்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் 23 வயதில் துறவற வாழ்வுக்கு வந்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற சிறந்த கல்வியாளர். முற்போக்கு சிந்தனை உடைய இப்பெருமகன் பாடல் பெற்ற பெரும் தலங்கள் கும்பாபிஷேகம் இல்லாமல் சீரற்று இருப்பது கண்டு பதவியேற்ற நாள் முதல் பாடல் பெற்ற தலங்களின் கும்பாபிஷேகங்களை பல கோடி ரூபாய் செலவில் செய்து வருகிறார்கள். பல

கோயில் புனருத்தான பணிகளை துரிதமாக நிறைவேற்றி சாதனை படைத்துள்ளார்கள்.

சீர்காழி தோணிபுரத்தில் கும்பாபிஷேகத்திற்காக யாக குண்டம் அமைப்பதற்காக நிலத்தை தோண்டிய போது பல நூறு செப்பு தகடுகள் திருமுறை பொறித்த வண்ணம் நிலத்திலிருந்து மீட்கப்பட்டு இப்போது சுவாமிகளால் பாதுகாக்கப்படுகிறது. அதைவிட ஆறாம் ஏழாம் நூற்றாண்டு காலத்து விக்கிரகங்கள் 44 நிலத்துக்கு கீழ் மீட்டெடுத்து பாதுகாக்கின்றார்கள்.

எனவே தருமை ஆதீன இன்றைய முதல்வருக்கு இத்தகைய பணிகளினால் ஒரு தனித்துவமான சிறப்பு காணப்படுகிறது. தருமை ஆதீனம் கலைக்கல்லூரி, பாடசாலைகள், வேத பாராயண பாடசாலைகள், திருமுறை பாடசாலை, சித்த ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் என பல்வேறு சமூக நலத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற சமூகப் பணிகளை ஆற்றுகின்றார்கள். 27க்கு மேற்பட்ட பாடல் பெற்ற தலங்களும், வேறு சிறிய தலங்களும், மடங்கள் சத்திரங்களும், தரும புர ஆதீனத்தின் தொடர்ச்சியான வழிநடத்தலின் கீழ் மிகச் சிறப்பாக செயற்படுகின்றன. காசி, திருச்செந்தூர், சிதம்பரம், இராமேஸ்வரம், திருவண்ணாமலை போன்ற இடங்களிலும் தர்ம ஆதீனத்தினுடைய புராதன மடங்கள் இன்றும் சிறப்பாக இயங்கி வருவது பாராட்டுக்குரியது.

தருமை ஆதீனத்தின் குரு முதல்வர் மணிவிழாவை முன்னிட்டு 300க்கு மேற்பட்ட நூல்களை மறு பதிப்பு செய்து வெளியிட்டுள்ளார்கள். பழைய சமய தத்துவ நூல்களையும், புராண நூல்களையும் சமய வழிபாட்டுக்கு உகந்த முன்னோர்கள் படைத்த இலக்கியங்களையும் மறுபதிப்பு செய்து வெளியிட்டமை சிறப்பம்சமாகும். சுவாமிகளின் மணி விழாவை முன்னிட்டு பல்வேறு இடங்களில் யாகங்கள், அன்னதானம் பல்வேறு சமூகப் பணிகள் மணிவிழா குறித்து சிறப்பாக நடைபெற்றது. தர்மபுரம் கோசாலைகளை அமைத்து பசுக்களை வளர்ப்பதிலும் அக்கறை செலுத்தி வருகிறது. நித்திய அன்னதானப் பணியை மிகச் சிறப்பாக செய்து வருகிறார்கள். ரூபா பத்து ரூபாவுக்கு மதிய உணவு கொடுக்கின்ற நெறிமுறையையும் ஏழைகளின் வாழ்வை காப்பாற்றுகின்ற நடைமுறைகளையும் இன்றைய ஆதீனகுரு முதல்வர் செய்து வருவது ஒரு விசேட அம்சமாகும்.

தருமை ஆதீன குரு மகா சன்னிதானம் தம்பிரான் சுவாமிகளாக இருந்த காலம் தொட்டு இன்று வரை ஈழத் திருநாட்டு சமய அமைப்புகளோடும் ஆலயங்களோடும் தொடர்பு கொண்டுள்ளார்கள். பல தடவை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கிறார்கள். திருகேதீஸ்வரர் ஆலயம், திருக்கோணேஸ்வரர் ஆலயம், நகுலேஸ்வரர் ஆலயம், தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயம், மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயம் போன்ற பிரபல்யமான ஆலயங்களுக்கு வருகை தந்து சிறப்புரைகள் ஆற்றியிருக்கிறார்கள். இந்த ஆண்டும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இங்கு வருகை தந்து சிவபூமி திருக்குறள் வளாகத்தில் தங்கியிருந்து சிறப்புரை ஆற்றியமை சிறப்பம்சமாகும். சுவாமிகள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து சைவத் தமிழர்களுக்கு பெரும் வழிகாட்டியாக திகழ வேண்டும் என்று நாமும் பிராத்திப்போமாக.

*கலாநிதி. ஆறு. திருமுருகன்*
*ஆசிரியர் – அருள்ஒளி*

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2026 பெருந்திருவிழா அறிவிப்பு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2026 ஆம் ஆண்டுப் பெருந்திருவிழா விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

* கொடியேற்றம்: 15.08.2026 (சனிக்கிழமை)
* தேர்த்திருவிழா: 25.08.2026 (செவ்வாய்க்கிழமை)
* தீர்த்தோற்சவம்: 26.08.2026 (புதன்கிழமை)




உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் அனைவரும் இந்த முக்கியத் தினங்களைக் குறித்துக்கொண்டு, உங்கள் பயணங்களையும், நிகழ்வுகளையும் இப்போதிருந்தே திட்டமிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தாயகத்துடன் இணைவதற்கான ஓர் அரிய ஆன்மீகப் பயணம் இது. இந்தச் சிறப்பான திருவிழாவில் கலந்துகொண்டு, அன்னை துர்க்கையின் பேரருளைப் பெற்றுச்செல்லுமாறு அழைக்கிறோம்.

# லேடி இராமநாதன் அம்மையாருக்கு திருவுருவச்சிலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அடுத்த மாதம் திறக்கப்படுகிறது.



“பெண்கள் கல்வி பெற வேண்டும் பண்பாட்டில் சிறக்க வேண்டும்” என்ற உயர்ந்த நோக்குடன் சேர். பொன். இராமநாதனுக்கு உற்ற துணையாக நின்று, சைவப் பெண்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார் அவர்கள். கல்வி, ஆன்மீகம், சமூகப் பணி ஆகியவற்றில் அவர் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் வகையில், யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் டிசம்பர் மாதம் அம்மையாரின் திருவுருவச்சிலை திறக்கப்பட இருப்பது, தமிழர் வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் இலங்கையின் புகழ்மிக்க தேசியத் தலைவராக விளங்கியதுடன், தமிழர்களின் பாரம்பரியக் கல்விச் சிந்தனைக்கு புத்துயிர் அளிக்கும் பணியிலும் ஈடுபட்டார். இவருக்குப் பக்கபலமாக இருந்தவர் லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார் (Miss R. L. Harrison).இவர் ஒரு ஆங்கிலேயப் பெண்மணி என்றபோதும், இந்து சமயக் கோட்பாடுகள் மீதும், திராவிடப் பண்பாட்டின் மீதும் ஆழமான ஈடுபாடு கொண்டவர். சேர். பொன். இராமநாதனைத் திருமணம் செய்தபின், லீலாவதி இராமநாதன் பெருமாட்டி எனப் போற்றப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் சைவப் பெண்கள் உயர்கல்வி பெறுவதற்காக இராமநாதன் கல்லூரியை (1913) நிறுவியதிலும், அதன் வளர்ச்சிக்குப் பணியாற்றியதிலும் அம்மையாரின் பங்கு அளப்பரியது. கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சைவப் பெண்களுக்கு, தமது சமயத்தையும் பண்பாட்டையும் பேணக்கூடிய ஒரு சூழலை உருவாக்க அவர் பெரிதும் முயன்றார்.




பெண்கள் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்காகச் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையை நிறுவவும் இக்கல்லூரி களமாக அமைந்தது. பெண்களின் மேம்பாட்டுக்காக சைவ மங்கையர் சபையை (1924) நிறுவினார். இது இன்றும் நிலைத்து நின்று நற்பணிகளை ஆற்றி வருகின்றது. சேர். பொன். இராமநாதனின் மறைவுக்குப் பின்னரும், அவரது கல்விச் சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்று கல்லூரியை முன்னேற்றுவதில் லேடி இராமநாதன் அம்மையார் அயராது உழைத்தார்.

இன்று, இலங்கையின் பாடசாலைகளில் இராமநாதன் கல்லூரி தனிச்சிறப்புடன் விளங்குவதற்கும், ஆயிரக்கணக்கான பெண்கள் பயன்பெறுவதற்கும் லேடி இராமநாதன் அம்மையாரின் தன்னலமற்ற சேவையே அடித்தளமாகும்.

அவரது திருவுருவச்சிலை கல்லூரியில் நிறுவப்படுவது, வெறும் சிலை நிறுவல் நிகழ்வு மட்டுமல்ல, அது பெண் கல்விக்கான கௌரவம். பெண்கள் கல்விக்காக உழைத்த ஒரு முன்னோடிப் பெண்மணிக்குச் செலுத்தும் நன்றியறிதல் ஆகும். தமிழர் பண்பாடு மற்றும் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு அவர் வழங்கிய முக்கியத்துவ-த்தை அடுத்த தலைமுறைக்கு உணர்த்தும் வரலாற்றுச் சின்னம் இச் சிலை ஆகும்.

டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தச் சிலை திறப்பு விழா, லேடி இராமநாதன் அம்மையாரின் கல்வி மற்றும் சமூகப் பணிகளை நினைவுகூர்ந்து, அவர் விட்டுச் சென்ற பாரம்பரியத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அனைவரும் உறுதிபூணும் ஒரு புனித நிகழ்வாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



# ஈழநாட்டின் பெருமைகளை திருச்செந்தூரில் ஆன்மீக முழக்கம் செய்த செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்



ஈழத்தில் இருந்து பதினோராவது தடவையாக திருச்செந்தூர் முருகன் கோயில் கந்தசஷ்டி பெருவிழாவில் பேசுவதற்காக அழைக்கப்பட்டிருந்த கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தொடர் சொற்பொழிவுகள், முருக பக்தர்களுக்கு ஒரு மாபெரும் பக்திப் பரவசத்தை அளித்தது. செஞ்சொற்செல்வரின் ஐந்து நாள் உரைகள், ஈழநாட்டின் வரலாறு, பண்பாடு மற்றும் ஆன்மீகப் பெருமைகளைத் தென்இந்திய மண்ணில் ஆழமாகப் பதியவைத்தது.

1. முதல் நாள்: கந்தபுராண அரங்கேற்றமும் முருகப் பெருமான் திருவருளும்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் முதல்நாள் உரையை ”கந்தபுராண அரங்கேற்றம்” எனும் தலைப்பில் ஆற்றினார். அவர் இளவயது கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் இயற்றியதன் பின்னணியையும், அதன் சிறப்புகளையும் விளக்கினார். கச்சியப்பரின் காப்புச் செய்யுளில் மூத்த அறிஞர்கள் தொல்காப்பியத்தைக் காரணம் காட்டி தவறு கண்டுபிடித்து அரங்கேற்றத்தைக் குழப்ப முயன்ற சம்பவத்தை விவரித்தார். அப்போது மனம் உடைந்த கச்சியப்பருக்கு முருகப்பெருமானே அருள் புரிந்து வீரசோழியத்தை உதாரணம் காட்டுமாறு கூறி உதவிய அற்புதச் செயலை பக்தி ரசம் ததும்ப எடுத்துரைத்தார். இந்த உரை கேட்டவர்களின் சிந்தையை தெய்வீகத்தால் குளிர்வித்தது.

2. இரண்டாம் நாள்: திருச்செந்தூர் புராணமும் ஈழநாட்டுத் தொடர்பும்

கந்தசஷ்டி இரண்டாம் நாளில் ஐயா அவர்கள் ”திருச்செந்தூர் புராணமும், ஈழநாடும்” எனும் தலைப்பில் உரையாற்றினார். திருச்செந்தூர் கோயிலின் நைவேத்திய பரம்பரையில் வந்த வீரராகவனால் பனை ஓலையில் எழுதப்பட்ட திருச்செந்தூர் புராண ஏட்டை ஆலய அர்ச்சகர்கள் கடலில் தூக்கி எறிந்த வரலாற்றைக்



கூறினார். கடலில் வீசப்பட்ட அந்த ஏடுகள், வட இலங்கை, கிழக்கு இலங்கை கடலை அடைந்து, மண்டூர் முருகன் ஆலயத்தை அடைந்து, வேடுவர்களால் பாதுகாக்கப்பட்டு நூலாக்கப்பட்ட அதிசயத்தை விளக்கினார். இதன் மூலம், இந்தியாவில் எழுந்த திருச்செந்தூர் புராணம் இன்றுவரை ஈழநாட்டில் வைத்துப் பாதுகாக்கப்படும் பெருமையை எடுத்துரைத்தார். மேலும், சூரனை அழிக்க முருகன் தெரிவு செய்த திருச்செந்தூர் யுத்தகள இரகசியங்களையும், நாழிக்கிணற்றின் மகிமையையும், சிவலிங்க பூசைக்குப் பின் முருகனுக்குப் பூசை நடப்பதன் தத்துவத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

3. மூன்றாம் நாள்: நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் வேல் வழிபாடு

மூன்றாவது நாளில், ஈழத்தமிழர்களின் பண்பாட்டில் வேல் வழிபாட்டின் முக்கியத்துவம் பற்றியும், தாய்த் தந்தை உறவின் மகத்துவம் பற்றியும் ஐயா பேசினார். நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வரலாறு சுவைபடக் கூறப்பட்டது. போர்த்துகேயர் நல்லூர் கோயிலை அழித்த பின்னர், ஈழத்தமிழர்கள் வீட்டுக்குள்ளேயே வேலை வைத்து வழிபட்ட வரலாற்றையும், ஒல்லாந்தர்கள் அழித்த கோயில் கற்களைப் பயன்படுத்தி யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டிய வரலாற்றையும் விவரித்தார். பின்னாளில் மாப்பாண முதலியார் ஒல்லாந்தரிடம் அனுமதி பெற்று மீண்டும் கோயில் கட்டிய வரலாற்றை மக்களின் மனதில் பதியவைத்தார். ஒரு ரூபாய்க்கு அர்ச்சனை, ஆண்டி முதல் அரசன் வரை சமமாக நடத்துதல், நுழைவுக் கட்டணம் அற்ற நிர்வாக முறை என நல்லூரின் நிர்வாகச் சிறப்புகளைத் தென்இந்திய மண்ணில் பெருமைபடப் பேசியது திருச்செந்தூர் பக்தர்களை நெகிழவைத்தது.

4. நான்காம் நாள்: நித்திய விரதங்களின் முக்கியத்துவம்



கந்தசஷ்டிப் பெருவிழாவின் நான்காம் நாள் சொற்பொழிவில், கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் நித்திய விரதங்களின்



அவசியம் குறித்து ஆழமான கருத்துக்களைப் பேசினார். கந்தசஷ்டி போன்ற நைமித்திய விரதங்கள் அனுஷ்டிக்கும் நாம், நித்திய விரதங்களான அன்றாடக் கடமைகள் பலவற்றைச் செய்யாமல் இருக்கின்றோம் என்று வலியுறுத்தினார். நித்திய விரதங்களை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது பற்றியும், பஞ்ச பூத வழிபாட்டின் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்தினார். விரதத்தின் பெருமைகளை மாறுபட்ட பரிமாணத்தில் ஆராய்ந்த இவரது உரை, அடியவர்களுக்கு அன்றாட வாழ்க்கையின் கடமைகளே மிக முக்கியமான விரதங்கள் என்ற புதிய சிந்தனையை அளித்தது.

5. ஐந்தாம் நாள்: செல்வச்சந்நிதி முருகன் பெருமைகள்



ஈழத்தில் இருந்து திருச்செந்தூர் மண்ணில் பதினோராவது தடவையாக சொற்பொழிவு ஆற்ற வந்திருந்த கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள், தனது ஐந்தாம் நாள் உரையை “அன்னதானக் கந்தன்“ என்று அழைக்கப்படும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் பெருமைகளைப் பேசுவதற்காக ஒதுக்கினார். கோபுரங்கள் அற்ற, மாடமாளிகைகள் அற்ற, கதவுகள் அற்ற எளிமையான ஆலயமான செல்வச்சந்நிதியின் வரலாற்றையும், அந்த ஆலயத்தில் 41 மடங்களோடு அன்னதானம் நடைபெற்ற அற்புதங்களையும் திருச்செந்தூர் மண்ணில் எடுத்துரைத்தார். எளிமையான வடிவில் இருந்தும், மக்கள் மத்தியில் பெரும் மகிமையுடன் விளங்கும் ஈழத்து ஆலயத்தின் சிறப்பை இந்த உரை மூலம் அழுத்தமாகப் பதிவு செய்தார். கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் இந்த ஐந்து நாள் தொடர் உரை, தமிழக முருக பக்தர்களுக்கு ஈழநாட்டின் ஆன்மீகம், வரலாறு, மற்றும் கலாச்சாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு மகத்தான வாய்ப்பாக அமைந்தது.





# ஞானத்தை யாரிடம் கற்பது?

"குரங்கு சாவதற்கு ஒரே ஒரு புண் போதும் முட்டாள் சாவதற்கு ஒரே ஒரு பிரச்சினை போதும்" என்று கிராமத்தில் ஒரு உவமான வாக்கியம் உண்டு.

காடுகளில் வாழும் குரங்குகள் பெரும்பாலும் நோய் வாய்ப்படுவதில்லை. ஆனால் அவைகளுக்கு ஒரே ஒரு புண் வந்துவிட்டால் போதும். அதை நோண்டி நோண்டிப் பெரிதாக்கித் தன்னை அழித்துக் கொள்ளும்.

அதுபோலத்தான் மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டிப் அதைப் பெரிதாக்கிக் கொள்வதும்.

அந்தக் குரங்கு கொஞ்சம் பொறுமையாய் புண்ணை நோண்டாமல் இருந்தாலே போதும், புண் விரைவில் ஆறிவிடும்.

இதை குரங்குக்குச் சொன்னாலும் புரியாது. அது புண்ணை நோண்டுவதை நிறுத்தப்போவதில்லை.

ஆனால்,

மனிதன் புரிந்து கொள்ள முடியும் தானே?

மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டிப் அதைப் பெரிதாக்கிக் கொள்ளாமல் வாழமுடியும் தானே?

மனித மனம் வெறும் "மனம்" மட்டுமே... மனித மனம் குரங்கு அல்ல...
என்ற புரிந்து கொள்ளுதல்தான் "ஞான உதயம்".

இந்த புரிதல் எப்போதும் இயற்கையில் எதிர்பாராத தருணங்களில் நடந்து கொண்டேதான் இருக்கிறது.
இதில் புரிந்து கொள்வது எல்லாமே சீடர்கள். புரிய வைப்பவை எல்லாமே குரு. இந்த மொத்த நிகழ்வும் "ஆன்மிகம்" எனப்படுகிறது, அவ்வளவுதான்.

தத்தாத்ரேயர் எனும் அவதூதர் காட்டில் சுற்றிக் கொண்டிருந்த போது, ஒரு நாட்டின் மன்னனைச் சந்தித்தார்.

தத்தாத்ரேயர் மிக மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்ட அரசன், அவரது மகிழ்ச்சிக்கான காரணத்தையும், அவரது குரு யார்? என்பதையும் கேட்டான்.

"எனக்கு 24 குருமார்கள் இருக்கின்றனர்..." என்றார் தத்தாத்ரேயர்.

இந்தப் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அரசன், "சுவாமி! ஒருவருக்கு ஒரு குரு தானே இருக்க முடியும்? தங்கள் பதில் வித்தியாசமாக உள்ளதே..." என்றான்.

அவனிடம், "பஞ்சபூதங்களான ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, காற்று,

“சந்திரன், புறா, மலைப்பாம்பு, கடல், விட்டில்பூச்சி, வண்டு,

“தேனீ, குளவி, சிலந்தி, யானை, மான், மீன், பருந்து, பாம்பு ஆகியவையும்,

“நாட்டியக்காரி பிங்களா, ஒரு குழந்தை, ஒரு பணிப்பெண், அம்பு தயாரிப்பவன்,
சூரியன் ஆகியோரும் என் குருக்கள் ஆவர்...“ என்றார் தத்தாத்ரேயர்.

மன்னன் ஏதும் புரியாமல் நின்றதைக் கண்ட தத்தாத்ரேயர் இதற்கு விளக்கமளித்தார்...
”மன்னா! பொறுமையை பூமியிடம் கற்றேன்

“தூய்மையை தண்ணீரிடம் தெரிந்து கொண்டேன்.

“பலருடன் பழகினாலும், பட்டும், படாமல் இருக்க வேண்டும் என்பதைக் காற்றிடம் படித்தேன்.

“எதிலும் பிரகாசிக்க வேண்டும் என்பதை தீ (நெருப்பு) உணர்த்தியது.
“பரந்து விரிந்த எல்லையற்ற மனம் வேண்டும் என்பதை ஆகாயம் - தெரிவித்தது.

”ஒரே சூரியன் இருந்தாலும் பல குடங்களில் உள்ள தண்ணீரில் பிரதிபலிப்பது போல மெய்ப்பொருள் ஒன்றாக இருந்தாலும் மனம் பலவாறாக சிந்திப்பதை உணர்ந்தேன்.

”வேடன் ஒருவன் புறாக்குஞ்சுகளைப் பிடித்தான். அவற்றின் மீது அன்பு கொண்ட தாய்ப்புறா தானும் வலியச் சென்று வலையில் சிக்கியது.
இதில் இருந்து பாசமே துன்பத்திற்கு காரணம் என்பதை உணர்ந்தேன்.

”எங்கும் அலையாமல் தன்னைத் தேடி வரும் உணவைப் பிடித்துக் கொள்வது போல, கிடைப்பதை உண்டு பிழைக்க வேண்டும் என்பதை மலைப்பாம்பிடம் கற்றேன்.

“பல்லாயிரம் நதிகளை ஏற்றுக்கொள்ளும் கடல் போல, எவ்வளவு துன்பம் வந்தாலும் ஏற்கும் பக்குவத்தை கடலிடம் படித்தேன்.

"பார்வையை சிதற விடாமல் ஒரே இடத்தில் மனதை செலுத்துவதை விட்டில் பூச்சி கற்றுத் தந்தது.
"எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியாயிருப்பதை தாயிடம் பால் குடிக்கும் குழந்தையிடம் கற்றேன்.

"பணிப்பெண் ஒருத்தி அரிசி புடைக்கும்போது வளையல்கள் உரசி ஒலி எழுப்பின் இரண்டு வளையல்களில் ஒன்றை அவள் கழற்றியதும், ஒலி அடங்கியது.

"இதில் இருந்து இரண்டு பேர் இருந்தாலும் தேவையற்ற விவாதம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு, தனிமையே சிறந்ததென்ற முடிவுக்கு வந்தேன்.

"புற்களால் குழிக்குள் மாட்டிக்கொண்ட பெண் யானையைப் பார்த்த ஆண் யானை, அதன் மேல் ஆசை கொண்டு அதுவும் வீழ்ந்தது. இதில் இருந்து, பெண்ணாசையும் துன்பத்துக்கு காரணம் என்பதை உணர்ந்தேன்... "
என்று ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமளித்தார்.

இதைக் கேட்ட அரசன், பூரண அமைதி அடைந்தான்.

தத்தாத்ரேயர் இயற்கையிடம் கற்ற இந்த உயர்ந்த பாடம் நம் எல்லாருக்குமே பொருந்தும் தானே..

தத்தாத்ரேயரின் "அவதூதகீதை" பகவான் ராமகிருஷ்ணர், ரமண மகரிஷி போன்ற பல மஹான்களால் சீடர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட அத்வைத கிரந்தமாகும்.

நல்ல சீடனுக்கு எல்லாமே குருதான்.

# தென்னிந்திய ஆதீனங்களை சந்தித்த செஞ்சொற்செல்வர்





பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக தென்னிந்தியா பயணமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் பல்வேறு ஆதீனங்களை சந்தித்து கலந்துரையாடி இலங்கையில் சைவசமயம் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கலந்துரையாடினார். அந்த வகையில் மிகவும் தொன்மையான வரலாறு கொண்ட மதுரை ஆதீனம் மற்றும் தருமபுரம் ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.









# தஞ்சையில் மாமன்னன் இராஜராஜ சோழன் சதயப் பெருவிழாவில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் மெய்சிலிர்க்க வைத்த விசேட உரை



மாமன்னன் ராஜராஜ சோழனுடைய 1040 ஆவது சதயப் பெருவிழா அவர் எழுப்பிய தஞ்சாவூர் பெருவுடையார் ஆலயத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. சிறப்புரை ஆற்ற அழைக்கப்பட்டிருந்த கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் காலையில் நடைபெற்ற நிகழ்வில் இராஜராஜ சோழனின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவம் செய்தார்கள். மாலை நடைபெற்ற நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திற்கு முன்பாக சோழர்களும் ஈழநாடும் எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றி அனைவர் மனங்களிலும் நீங்கா இடம் பிடித்தார். உச்சநீதி மன்ற நீதியரசர் அரங்க. மகாதேவன், தவத்திரு பொன்னம்பல அடிகளார் மற்றும் பட்டிமன்றம் புகழ் ராஜா உள்ளிட்ட பலர் திருமுருகன் ஐயாவின் பேச்சாற்றலையும் ஈழத்தில் அவர் ஆற்றிவரும் ஆன்மீக பணிகள் மற்றும் மக்கள் பணிகளின் சிறப்புக்களையும் கூறி ஐயாவை கௌரவப்படுத்தினார்கள்.









# கார்த்திகை விளக்கீடு விரதம்: ஒளிமயமான பெருவிழா



கார்த்திகை மாதம் என்பது சைவர்களின் வாழ்வில் மிகுந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாதமாகும். இந்த மாதத்தின் பௌர்ணமி தினத்தன்று, கார்த்திகை விளக்கீடு (கார்த்திகை தீபம்) அல்லது திருவண்ணாமலை தீபத் திருநாள் என வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இல்லங்கள் தோறும் தீபங்கள் ஏற்றி, இருள் நீக்கி, ஒளியைப் பரப்பும் இந்தப் பெருவிழா, வெறும் சடங்காக இல்லாமல், ஒரு ஆழமான ஆன்மீகத் தத்துவத்தை உள்ளடக்கியதாகும்.

கார்த்திகை தீபத்தின் மூலக் கதையானது, சிவபெருமானின் அருவுருவத் திருமேனியான ஜோதி வடிவத்தை விளக்குகிறது. இதுவே "லிங்கோத்பவத் தத்துவம்" என்று அழைக்கப்படுகிறது.

படைப்புக் கடவுளான பிரம்மனுக்கும், காத்தல் கடவுளான விஷ்ணுவுக்கும் இடையே 'தங்களில் யார் பெரியவர்?' என்ற வாதம் எழுந்தது. வாதம் முற்றிய நிலையில், அவர்கள் முன் ஒரு பேரொளிப் பிழம்பாக, அடிமுடி காண முடியாத பெரும் ஜோதி ஒன்று தோன்றியது. அதுவே சிவபெருமான்!

அந்த ஜோதியின் அடியையும் முடியையும் கண்டுபிடிப்பவரே பெரியவர் என்று இருவரும் முடிவு செய்தனர். விஷ்ணு பன்றியின் (வராகம்) உருவம் கொண்டு அடியைத் தேடி பூமிக்குள் ஆழ்ந்து சென்றார். பிரம்மன் அன்னப் பறவையின் (அன்னம்) வடிவம் கொண்டு முடியைத் தேடி வானில் உயர்ந்து சென்றார்.

விஷ்ணுவால் அடியைக் காண முடியவில்லை. பிரம்மனும் முடியைக் காண இயலாமல், தான் முடியைக் கண்டதாகத் தாழம்பூவைக் கொண்டு பொய்சாட்சி கூறினார். அப்போது, அந்த ஜோதிப் பிழம்பின் நடுவே சிவபெருமான் தோன்றி, பொய் கூறிய பிரம்மனுக்கு ஆலயங்களில் பூசை இல்லை என்று சாபமிட்டார்.

சிவபெருமான் தனது அருவுருவ ஜோதி வடிவத்தைக் காட்டிய இந்த நாளை நினைவு கூர்ந்து, இல்லங்கள் தோறும் ஒளி ஏற்றி, இறைவனின் ஒளி வடிவத்தை வணங்குவதே கார்த்திகை விளக்கீடு விரதமாகும். இந்த நிகழ்வின் மையமான திருவண்ணாமலையில், மலையே சிவலிங்கமாகப் பாவிக்கப்பட்டு, மலையின் உச்சியில் அண்டமெங்கும் பரந்திருக்கும் ஜோதி வடிவில் மகா தீபம் ஏற்றப்படுகிறது.

அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து நீராடி, தூய ஆடை அணிவது கட்டாயம். கார்த்திகை தீபம் ஏற்றப்படும் மாலை வேளையே இந்த விரதத்தின் உச்சக்கட்டமாகும். இல்லத்தின் வெளியேயும் உள்ளேயும் வரிசையாக அகல் விளக்குகளை ஏற்றி வைக்க வேண்டும். வீட்டின் வாசலில் தொடங்கி, உள்முற்றம், சமையலறை, பூஜை அறை என அனைத்து இடங்களிலும் விளக்குகளின் ஒளி பரவ வேண்டும். இதில், முக்கியமாக 27 நட்சத்திரங்களுக்காக 27 விளக்குகள் ஏற்றுவது மரபு. விளக்குகளை வெறும் தரையில் வைக்காமல், அரிசி மாவினால் கோலமிட்டு, அதன் மீது பரம்பொருளின் ஒளி வடிவமாகக் கருதப்படும் விளக்குகளை வைப்பது பக்திக்குரிய செயலாகும்.

இந்த நாளில், பச்சரிசி மாவால் செய்யப்பட்ட மாவிளக்கு மாவை நிவேதனம் செய்வது சிறப்பு. அத்துடன், பொரி உருண்டை, அப்பம், அவல் போன்ற நிவேதனப் பொருட்களையும் படைத்து இறைவனை வணங்குவர். இந்த நிவேதனப் பொருட்களை, ஏழை எளியவர்களுக்கும், சுற்றத்தாருக்கும் வழங்குவது மிகவும் புண்ணியமாகும். மாலை வேளையில் தீபம் ஏற்றி வழிபாடு முடிந்த பிறகு, பால் பழம் அல்லது நிவேதனப் பொருட்களை உண்டு விரதத்தை நிறைவு செய்யலாம். இரவு முழுவதும் விளக்குகள் எரிந்த வண்ணம் இருப்பது ஐஸ்வர்யத்தை அளிக்கும் என்பது நம்பிக்கை.

கார்த்திகை விளக்கீடு என்பது வெறும் விளக்கு வைக்கும் திருவிழா அல்ல் அது ஒரு மகத்தான ஆன்மீகத் தத்துவத்தை உணர்த்துகிறது. அக இருள் நீங்கி ஞான ஒளியானது நாம் ஏற்றி வைக்கும் ஒவ்வொரு அகல் விளக்கும், நம் உள்ளத்தில் இருக்கும் அகங்காரம், மாயை, ஆணவம் போன்ற இருள்களை நீக்க வேண்டும் என்பதையே குறிக்கிறது. வெளிச்சம் இருளைப் போக்குவது போல, ஞான ஒளியான இறைவன் நமது அறியாமையைப் போக்க வேண்டும் என்பதே தீபத் தத்துவத்தின் சாராம்சம். “யாம் பெற்ற



இன்பம் பெறுக இவ்வையகம்“ என்ற கொள்கைப்படி, தீப ஒளியை வெளியேற்றுவது, நாம் பெற்ற ஞானத்தைப் பிறருக்கும் பகிர்வதைக் குறிக்கிறது.

கார்த்திகை மாதம் என்பது முக்திக்குரிய மாதமாகக் கருதப்படுகிறது. கார்த்திகை தீபத்தன்று சிவபெருமானை ஜோதி வடிவில் வணங்குவது, சகல பாவங்களையும் போக்கி, பிறவாப் பெருவாழ்வை (முக்தி) அளிக்கும் என்பது ஐதீகம். சிவபெருமான், திருமால், பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளும் ஜோதி வடிவில் ஒன்றாகி உலகிற்கு அருள்பாலிக்கும் நாளாக இது கருதப்படுகிறது.

கார்த்திகை விளக்கீடு என்பது ஒரு குடும்ப ஒற்றுமைக்கான விழாவாகவும் திகழ்கிறது. அன்று உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று விளக்குகளைப் பார்த்து மகிழ்வதும், நிவேதனப் பொருட்களைப் பகிர்ந்துகொள்வதும் எமது பண்பாட்டுச் சிறப்பம்சமாகும்.

கார்த்திகை விளக்கீடு என்றாலே திருவண்ணாமலையில் ஏற்றப்படும் மகா தீபமே முதன்மையாகப் பேசப்படுகிறது. அங்கே, அண்ணாமலையானின் ஜோதி தரிசனத்தைக் காணப் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மலைப்பாதையில் ஏறிச் சென்று வழிபடுவர். திருவண்ணாமலையில் பரணி தீபம் அதிகாலையில் ஏற்றப்பட்ட பிறகு, மாலை 6 மணியளவில் 2,668 அடி உயரமுள்ள மலை உச்சியில் நெய் மற்றும் திரி கொண்டு பிரமாண்டமான செப்புக் கொப்பரையில் மகா தீபம் ஏற்றப்படுகிறது. இந்த மகா தீபம், உலக மக்கள் அனைவரையும் ஒருங்கே பார்க்கச் செய்து, ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருளே இறைவன் என்ற தத்துவத்தைப் பறைசாற்றுகிறது. கார்த்திகை விளக்கீட்டின் மூலம், இல்லங்களிலும் உள்ளங்களிலும் ஒளி பரப்பி, ஆனந்தமான வாழ்வைப் பெறுவோம்.

# தருமையாதீன சுவாமிகள் மணிவிழாவில் கம்பவாரிதி அவர்களும் செஞ்சொற்செல்வர் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள்




திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் 27வது குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுடைய மணிவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. பத்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற நிகழ்வுகளில் பெருமளவு அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள். பல நூல்கள் வெளியிடப்பட்டதோடு பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. ஆன்மீக கொண்டாட்டமாக இடம்பெற்ற நிகழ்வுகளில் பத்து நாட்களும் மூன்று வேளை அன்னதானம் வழங்கப்பட்டது.

03.11.20205 அன்று நடைபெற்ற காலை நிகழ்வில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஈழ நாட்டவர் சார்பாக சுவாமிகளுக்கு நினைவுக்கேடயம் வழங்கி பொன்னாடை போர்த்தினார். சுவாமிகளும் ஐயாவின் பேச்சாற்றலையும் செயற்திறனையும் மெச்சி கௌரவம் செய்தார்கள். அதேபோல கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களும் மணிவிழாவில் பங்குபற்றி சிறப்புரை ஆற்றியிருந்தார்கள்.








# தேசிய மட்ட பண்ணிசை போட்டியில் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு பெருமைமிகு வெற்றி!



தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் கீழ் இயங்கும் அறநெறி பாடசாலை மாணவர்கள், தங்கள் திறமை மற்றும் அர்ப்பணிப்பின் பலனாக 2025 நவம்பர் 8 ஆம் தேதி கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட பண்ணிசை போட்டியில் மூன்றாம் இடம் பெற்றுள்ளனர்.

இவ்விழாவில் நாடு முழுவதிலுமிருந்து பல அறநெறி பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டபோதிலும், தெல்லிப்பழை மாணவர்கள் தங்கள் இனிமையான பாட்டு, துல்லியமான இசை மற்றும் ஒத்திசைவு மூலம் நடுவர் குழுவினரின் பாராட்டைப் பெற்றனர். இவ்வெற்றிக்கு பாடசாலையின் ஆசிரியர்கள், மற்றும் தேவஸ்தான நிர்வாகம் வழங்கிய வழிகாட்டுதலும் ஊக்கமும் காரணமாகும்.

இம்மாணவர்களின் சாதனை தெல்லிப்பழை பகுதியின் பெருமையை உயர்த்தியுள்ளதுடன், இளம் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த ஊக்கமாகவும் விளங்குகிறது.



# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரதம் மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது




தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில், 21 நாட்கள் நோன்பிருந்த பக்தர்களுக்குப் பலன் அளிக்கும் முக்கிய நிகழ்வாகக் கேதார கௌரி விரதம் நிறைவு நாள் அமைகிறது. இந்த நாளில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தின் வளாகத்தில் திரண்டிருந்தனர். விரத நிறைவு நாளின் சிறப்பைக் குறிக்கும் வகையில், அதிகாலை வேளையிலேயே விசேட சடங்குகள் ஆரம்பமாயின. ஆலயத்தின் பிரதான வாயிலுக்கு வெளியே விரதமிருந்து வந்த பக்தர்கள், இறை சிந்தையுடன் அமைதி காத்தனர். செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகம் நிகழ்வுகள் ஆரம்பமாகின. காலை 8.00 மணிக்கு விசேட பூசைகள் ஆரம்பமாகி, 8.15 மணிக்கு கேதார கௌரி விரதத்தின் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புப் பூசைகள் இடம்பெற்றன.

விசேட பூசைகள் யாவும் நிறைவுற்ற பின்னர், ஆலயத்தின் சம்பிரதாய முறைப்படி கௌரி காப்பு (நோன்புக் கயிறு) வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அம்பாள் அடியார்களுக்கு, விரதத்தின் பலனாக இந்தக் காப்புக் கயிறு வழங்கப்பட்டது. இந்த நோன்புக் கயிறானது, பார்வதியைச் சிவனோடு என்றும் பிரியாமல் இணைக்கும் சக்தியின் அடையாளமாகக் கருதப்பட்டது.

அன்னை துர்க்கை ஆலயத்தில் ஈசனுடன் கௌரியாகக் காட்சிதரும் உன்னதக் காட்சியைக் கண்டு மக்கள் மெய் சிலிர்த்து வணங்கினர்.





# ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்திய தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வைரவிழா நிகழ்வுகள்



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 60ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வைரவிழா நிகழ்வானது 11.10.2025 - சனிக்கிழமை மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத்திலிருந்து கலை கலாசார பண்பாட்டு அம்சங்களுடன் கூடிய நடைபவனியுடன் மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகி நிகழ்வுகள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தலைவர் பொ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு ஆசியுரையினை மாவை ஆதீன முதல்வர் மகாராஜாஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார் மற்றும் மருதனார்மடம் ஸ்ரீ அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.





இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தனும், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், வலி வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், தெல்லிப்பழை பிரதேச செயளாளர் சிவகெங்கா சுதீஸ்ணர் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான குரு சிவப்பிரம்மஸ்ரீ இ.பிரசன்னவதனக் குருக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

60ஆவது ஆண்டு நிறைவாக ”வைரச்சங்கமம்” எனும் நூ ல் வெளியீடு செய்யப்பட்டதுடன் வீணைக்கச்சேரி, கோவலன் கண்ணகி நாடகம் மற்றும் தெய்வீக இசைச்சங்கமம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

”சிவபூமி சிற்பி” எனும் வைரவிழா சிறப்பு கௌரவ பட்டம் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கும், வைரவிழா சிறப்புக் கௌரவம் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்கும், தேகாந்த நிலை கௌரவம் அமரராகி எம்மை எல்லாம் ஆசீர்வதிக்கும் துர்க்கா துரந்தரி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் வழங்கப்பட்டது. பெருமளவு மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு தெல்லிப்பழையின் ஆன்மீக எழுச்சியை மீண்டும் ஒரு தடவை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது.





# துலாபாரத்தில் ஏற்றப்பட்ட கிருஷ்ண பரமாத்மா



மகாபாரத காலகட்டத்தில், துவாரகை நகரை ஆண்டு வந்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அழகிலும் குணத்திலும் இணையற்ற எட்டு மனைவிகளை (அஷ்ட பத்தினிகள்) கொண்டிருந்தார். இவர்களில், பிரதான மகாராணியான ருக்மிணி, சாந்தம், பக்தி, பணிவு ஆகிய குணங்களின் வடிவமாகத் திகழ்ந்தாள். மற்றொரு மனைவியான சத்யபாமாவோ, வீரத்திலும் செல்வத்திலும் திளைத்திருந்த சத்ராஜித்தின் மகள். அவள் அபாரமான அழகுடையவளாக இருந்தாலும், தந்தையின் செல்வச் செருக்கும், தான் கிருஷ்ணருக்கு அர்க்கியங்கள் அளித்த மனைவியானோம் என்ற கர்வமும் அவளிடம் லேசாகத் தலைதூக்கத் தொடங்கியது. இவர்களுக்கிடையே, கிருஷ்ணரின் மனதில் யாருக்கு அதிக இடம் என்ற ஒரு மெல்லிய போட்டி இருந்து கொண்டே இருந்தது.

ஒருமுறை, தேவர் உலகின் முனிவரான நாரதர், துவாரகைக்கு விஜயம் செய்தார். நாரதர் எங்கு சென்றாலும், அங்கு ஒரு சிறு குழப்பம் அல்லது தர்மப் பாடம் நிகழாமல் திரும்புவதில்லை. நாரதரின் வருகையின் போது, சத்யபாமா அவரை உபசரித்து, தான் கிருஷ்ணரின் மீது வைத்திருக்கும் ஆழமான அன்பைப் பற்றிப் பெருமையுடன் பேசினாள். நாரதரும் சத்யபாமாவின் அகங்காரத்தைக் கண்ணுற்று, அவளுக்குப் பாடம் புகட்ட இதுவே சரியான தருணம் என்று முடிவு செய்தார்.

“தாயே சத்யபாமா! நீங்கள் கிருஷ்ணர் மீது வைத்துள்ள அன்பு உண்மையானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உங்கள் செல்வத்தின் மீதும், பெருமையின் மீதும் நீங்கள் வைத்திருக்கும் பற்று, உங்கள் அன்பை விடச் சிறிது அதிகமாக இருப்பது போல எனக்குத் தோன்றுகிறது” என்று நாரதர் மெதுவாகக் கூறினார்.

சத்யபாமா உடனே கோபம் கொண்டாள். “முனிவரே! என் அன்புதான் கிருஷ்ணருக்கு மிகவும் உகந்தது. நான் அவருக்காக எதையும் தியாகம் செய்யத் தயார்” என்று சவால் விட்டாள்.

நாரதர் சிரித்துக்கொண்டே, "அப்படியானால், நீங்கள் கிருஷ்ணரை எனக்குத் தானமாக அளிக்கத் தயாரா? இது ஒரு தான தர்மம். அதைச் செய்தால், உலகிலேயே சிறந்த தான தர்மத்தைச் செய்த பெருமை உங்களுக்குக் கிடைக்கும். கிருஷ்ணரே உங்கள் வசமாவார்" என்று ஒரு தந்திரமான யோசனையைக் கூறினார். சத்யபாமா எந்தவிதத் தயக்கமும் இன்றி, "உடனே செய்யுங்கள் முனிவரே! கிருஷ்ணரை நான் உங்களுக்குத் தானமாக அளிக்கிறேன்" என்று அறிவித்தாள். ருக்மிணி போன்ற மற்ற ராணிகள், இது என்ன விபரீத விளையாட்டு என்று அதிர்ச்சியில் உறைந்து போயினர்.

சத்யபாமாவின் ஆணைப்படி, கிருஷ்ணர் நாரதருக்குத் தானமாக அளிக்கப்பட்டார். நாரதர் உடனே, "இன்று முதல் கிரு'ணர் என்னுடைய அடிமை. இவரை என் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்வேன்" என்று அறிவித்தார். சத்யபாமா இந்த நிகழ்வின் விபரீதத்தை உணரும் முன்பே, நாரதர் கிரு'ணரின் கையைப் பிடித்துக்கொண்டு, "வாரும் கிரு'ணா! என் தபோவனத்திற்குச் செல்லலாம்" என்று அழைத்தார். இதைக் கண்ட சத்யபாமா மனம் கலங்கினாள்.

கிருஷ்ணர் கிளம்பத் தயாரானதும், சத்யபாமா நாரதரின் காலில் விழுந்து கெஞ்சினாள். "சுவாமி! நான் அறியாமையால் இந்தத் தவறைச் செய்துவிட்டேன். என் கணவரை என்னிடமே ஒப்படைத்து விடுங்கள். அதற்கு ஈடாக, நீங்கள் என்ன கேட்டாலும் நான் கொடுக்கிறேன்" என்று வேண்டினாள். நாரதர், தனக்கு வேண்டியது கிருஷ்ணர் மட்டுமே என்று மறுத்தார்.

இறுதியில், சத்யபாமாவின் அழுகையைப் பார்த்த நாரதர், அவளுக்கு ஒரு வழியைக் கூறினார்:

"சத்யபாமா! தர்ம சாஸ்திரப்படி, தானமாக வழங்கப்பட்ட பொருளைத் திரும்பப் பெற வேண்டுமானால், அதற்கு ஈடான மற்றொரு பொருளைத் தானமாக அளிக்க வேண்டும். எனவே, கிருஷ்ணரின் எடைக்கு எடை தங்கத்தையும், நவரத்தினங்களையும் நீங்கள் எனக்குத் துலாபார தானமாக (தராசில் நிறுத்து தானமாக) வழங்கினால், கிருஷ்ணரை நான் உங்களிடம் திருப்பி ஒப்படைப்பேன். அதுவே நீங்கள் செய்த தானத்திற்குரிய உண்மையான மதிப்பாகும்."

சத்யபாமாவுக்குக் களிப்பு உண்டாயிற்று. அவள் தன் தந்தையின் அளவற்ற செல்வம் குறித்தும், இந்திரனுக்கு இணையாகத் தனக்கு

இருக்கும் செல்வம் குறித்தும் பெருமை கொண்டிருந்தாள். கிருஷ்ணரின் எடைக்குத் தங்கத்தை அளிப்பது என்பது அவளுக்கு ஒரு பெரிய வி'யமே அல்ல. அவள் உடனே வேலைக்காரர்களை அழைத்து, ஒரு பெரிய தராசை நிறுவி, அதன் ஒரு தட்டில் கிரு'ணரை அமரச் செய்தாள். மற்ற தட்டில், அவளது அனைத்து ஆபரணங்களையும், தங்கக் காசுகளையும், நவரத்தினக் குவியல்களையும் வைக்கச் செய்தாள்.

ஆனால், அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக, தராசின் மறுபக்கம் வைக்கப்பட்ட செல்வங்கள் எல்லாம் சேர்ந்து, கிருஷ்ணரின் எடைக்கு ஈடாகவில்லை. சத்யபாமாவின் கருவூலத்தில் இருந்த அத்தனை தங்கமும் தீர்ந்துபோனது.

சத்யபாமா அழத் தொடங்கினாள். அவளது அகங்காரம் சுக்குநூறாக உடைந்தது. தான் வைத்திருக்கும் செல்வத்தை விட, கிரு'ணரின் மதிப்பு பல மடங்கு அதிகம் என்பதை அவள் உணர்ந்தாள். அவள் நாரதரிடம், "முனிவரே! என் செல்வம் முழுவதும் தீர்ந்துவிட்டது. இப்போது நான் என்ன செய்வேன்? என் உயிர் உள்ளவரை என் கணவரை என்னால் மீட்க முடியாதா?" என்று கதறினாள்.

இந்த நிகழ்வு, மற்ற ராணிகளுக்கும், சபையோருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அப்போது, அமைதியாக இந்தச் சடங்குகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த முதன்மை ராணியான ருக்மிணி தேவி மெதுவாக முன்வந்தாள். அவள் சத்யபாமாவின் அருகில் வந்து, அமைதியான குரலில், "சத்யபாமா! நீங்கள் இவ்வளவு செல்வத்தை வைத்திருந்தும், உங்கள் கணவரின் எடைக்கு ஈடாகவில்லை.

ஏனெனில், அவர் வெறும் உடல் அல்ல. அவர் உலகிற்கெல்லாம் ஆதாரமான பரம்பொருள். பொருள் செல்வத்தால் அவரை ஈடுகட்ட முடியாது" என்று கூறினாள்.

பின்னர், ருக்மிணி தேவி கண்ணனைப் பணிந்து வணங்கி, துளசிச் செடியின் இலை ஒன்றைப் பறித்து வந்தாள். அந்த ஒற்றைத் துளசி இலையை, கிருஷ்ணர் அமர்ந்திருந்த தராசின் மறுதட்டில் வைக்கச் சொன்னாள்.

ஆனால், ஒரு நிபந்தனையுடன்! அந்த இலையை வைப்பதற்கு முன், அவள் "எனது முழுமையான அன்பையும், பணிவையும்,

பக்தியையும் என் கணவர் ஸ்ரீ கிருஷ்ணரின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்கிறேன்" என்று கூறி, அந்தத் துளசி இலையைத் தராசின் மறுதட்டில் வைத்தாள்.

அதிசயம் நிகழ்ந்தது! ருக்மிணி தேவியின் அசைக்க முடியாத அன்பையும் பக்தியையும் சுமந்த அந்த ஒரே ஒரு துளசி இலை வைக்கப்பட்டதும், அதுவரை வைக்கப்பட்ட அனைத்துத் தங்கத்தாலும் சமன் செய்ய முடியாத கிருஷ்ணரின் எடை, அந்த ஒற்றை இலையால் சமன் செய்யப்பட்டது. கிருஷ்ணர் அமர்ந்திருந்த தட்டு, துளசி இலை இருந்த தட்டுக்குச் சமமாக வந்தது.

நாரதர், சத்யபாமாவைப் பார்த்துப் புன்னகைத்தார். "சத்யபாமா! இப்போது புரிந்ததா? கிருஷ்ணரின் அன்பைப் பணத்தால் எடைபோட முடியாது. அவர் செல்வத்தால் மதிப்பிட முடியாதவர். ஆனால், உங்கள் சக ராணியான ருக்மிணியின் பணிவான பக்தியும், உண்மையான அன்பும் – ஒரு துளசி இலையின் மூலமாகவே – கிருஷ்ணரின் விலையை விட உயர்வாகிவிட்டது. கிருஷ்ணரை மீட்கும் உண்மையான மதிப்பு, தூய பக்தியில் மட்டுமே உள்ளது."

இந்தச் சம்பவம், சத்யபாமாவின் அகங்காரத்தை முழுமையாகத் தகர்த்தெறிந்தது. அவள் ருக்மிணியின் பாதங்களில் விழுந்து, தன் தவறான எண்ணங்களுக்காக மன்னிப்புக் கேட்டாள். ருக்மிணி தேவியும் அவளை அன்புடன் ஏற்றுக்கொண்டாள். கிருஷ்ணர் தராசை விட்டு இறங்கி, நாரதருக்கு நன்றி கூறி, அவரை வழி அனுப்பி வைத்தார்.

இந்த துலாபாரம் கிளைக்கதை, மகாபாரதத்தின் மூலம் உலகிற்கு உணர்த்தும் ஆழமான தத்துவம் இதுதான்: எந்தவொரு உறவிலும், பொருட் செல்வமோ, அகங்காரமோ நிலைக்காது. உண்மையான அன்பு, பணிவு, மற்றும் இதயப்பூர்வமான பக்தி மட்டுமே கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பிணைப்பைத் தீர்மானிக்கும் விலைமதிப்பற்ற சொத்துக்களாகும்.

# இந்தியாவில் கௌரவம் பெற்று திருப்பிய செஞ்சொற்செல்வருக்கு தேவஸ்தானத்தில் விசேட கௌரவம்



இந்தியாவில் பல்வேறு நிகழ்வுகளில் சிறப்பு பேச்சாளராக கலந்து கொள்ள விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் இந்தியா சென்று, எம் ஈழத்திருநாட்டை பெருமைப்படுத்தி பல கௌரவங்களைப் பெற்றுக் கொண்ட எமது ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் 03.11.2025 அன்று நாடு திரும்பியுள்ள நிலையில், எம்மண்ணையும் மக்களையும் சர்வதேச ரீதியில் பெருமைப்படுத்திய அவரை வரவேற்கும் நிகழ்வு 04.11.2025 அன்று காலை தேவஸ்தானத்தில் இடம்பெற்றது.

பதினொராவது தடவையாக திருச்செந்தூரில் கந்தசஷ்டி விரத காலத்தில் சொற்பொழிவு ஆற்றியதோடு, தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் பெருமளவு மக்கள் கூட்டத்திற்கு மத்தியில் இராஜ இராஜ சோழன் சதயப் பெருவிழாவில் ஈழத்திற்கும் சோழர்களுக்குமான தொடர்பில் சிறப்புரையாற்றி, தருமபுர ஆதீன மணி விழாவிலும் சிறப்புரை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.





